**மெததும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 14 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் மெததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அன்பளிப்பாக கிடைத்திருந்த 2 சொத்துக்களின் பெறுமதி மற்றும் 2 அலுலக உபகரணங்களில் பெறுமதி ரூபா 69,407 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (ii) | செலவின கடன் கொடுனர் மற்றும் ரூபா 77,915 கூடுதலாகவும் வேலை கடன் கொடுனர் பெறுமதி ரூபா 48,344 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (iii) | காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 168,234 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (iv) | வேலை கடன் படுனர் ரூபா 1,469,937 யினை கூடுதலாகவும் பெற வேண்டிய ரூபா 400,000 கடன் படுனர் குறைத்தும் காட்டப்பட்டிருந்து. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |

(ஆ) **பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய மீதி ரூபா 14,567,082 ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பெறுமதிகளுடன் தொடர்புடைய அபிவிருத்தி கருத்திட்டங்களிற்கு தற்போது கனிசமான அளவில் பணம் கிடைத்திருப்பதாக அறிவிக்கிறேன். |

(இ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,869,447 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | அபிவிருத்தி கருத்திட்ங்களில் தற்போது கனிசமான அளவில் பணம் செலுத்தியுள்ளதுடன், அதற்குள் நிறுத்தற்பணம் கோரப்படாத வேலைகளும் நிலவுவதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 47,147,341 பெறுமதியான 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக இருப்பு பதிவேடு, அட்டவணைகள் மற்றும் சமன்படுத்திய வைப்பு பதிவேடு போன்ற சான்றுகள் சமர்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இலக்கம் 15 பிரதேச சபை சட்டத்தின் 126 (vii) (ஊ) பிரிவு மற்றும் 2016 திசெம்பர் 13 திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமாணி | 46 விளம்பர பலகைகளிலிருந்து ரூபா 53,887 அறவிட வேண்டியிருந்தது. | வருட ஆரம்பத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டு கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டம். | விளம்பர பலகை ஆய்வொன்றை மேற்கொண்டு நிலுவை கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) 2016 மாரச் 17 இலக்கம் 2016.'.03 மத்திய மாகாண ஆணையாளரின் சுற்றறிக்கை 10 பிரிவு | 09 கடையறைகள் உப குத்தகை வழங்கப்பட்டிருந்தது. | உப குத்தகை வழங்கப்பட்ட கடையறைகளை சபை சுவீகரித்து சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும. | 09 கடையறைகளில் 05 யை உப குத்தகை வழங்கியில்லாததுடன், வேறு நபர்கள் இக் கடையறைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். மீதி 04 கடையறைகள் பற்றி பரீட்ச்சித்து அறிக்கையிடுகிறேன். |
| (இ) நி.பி 371 (2) (ஆ) நிமித்த உப கட்டுநிதி | ரூபா 160,728 ஆன முற்பண மீதியொன்று தீர்க்கப்படடிருக்கவில்லை. | முற்பணம் குறித்த விடயம் முடிவுற்றவுடன் தீர்க்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 12,383,727 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 1,711,330 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,615,024 | 3,693,815 | 4,533,420 | 2,734,289 | 3,756,802 | 3,855,960 | 4,007,323 | 3,182,497 |
| (ii) | வாடகை | 2,337,626 | 2,598,674 | 3,327,988 | 1,896,747 | 2,771,989 | 1,971,998 | 1,748,857 | 3,593,541 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,073,600 | 3,141,886 | 3,076,836 | 3,079,836 | 2,784,915 | 2,810,049 | 2,808,799 | 60,350 |
| (iv) | ஏனைய வருமானம் | 474,100 | 549,600 | 610,580 | 750,630 | 404,580 | 484,560 | 181,040 | 1,812,060 |
| | | 9,500,350 | 9,983,975 | 11,548,824 | 8,461,502 | 9,718,286 | 9,122,567 | 8,746,019 | 8,648,448 |

### 2.2.2 வருமானம் சேகரித்தளின் செயலாற்றுகை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சேர்க்கப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 18,632,423 ஆன போதும், ஆண்டினுள் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 11,548,824 ஆனமையால் வரமானம் சேகரிப்பதன் முன்னேற்றம் 62 சதவீதமானது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 879,086 ஆனது. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக்கொள்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) துணைச் சட்டம்** | | |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை மேற் கொள்ள துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 19 விடயங்களுக்காக மாத்தரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | துணைச் சட்டம் விதித்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| **(ஆ) எதிர்பார்த்த நலன்கள் (out come) பெற்றுக் கொள்ளாமை** | | |
| 2017 ஆண்டில் ரூபா 1,991,802 செலுத்தி சிறுவர் பூங்காவில் மலசல கூடமொன்று மற்றும் ரூபா 874,437 செலுத்தி சிறுவர் பூங்காவில் மதிலொன்று நிர்மாணித்து இருந்த போதும், அவை விளைவற்றதாக நிலவியது. | சொத்துக்களிலிருந்து எதிர்பார்த்த பலனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பகல் நேர சிறுவர் காப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சிறுவர் பூங்காவை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| **(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்** | | |
| பிரதேசத்தில் ஒன்று சேறும் கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சிக்குட்படுத்தப்படாது சுற்றாடலிற்கு பாதிப்பேற்படும் வகையில் இடப்பட்டிருந்தன. | சுற்றாடலிற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | உக்களடையும் கழிவுப் பொருட்களை குண்டசாலை இயற்கை பசளை கொட்டிலிற்கு பெற்றுக் கொடுக்கப்படுகிறது. உக்களடையாத குப்பைகளிற்கு உடிஸ்பத்துவ மற்றும் மெத மஹனுவர குப்பை பிரிக்கும் நிலையம் இரண்டு நிர்மானிக்கப்படுகிறது. |
| **(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்** | | |
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

3.2 **முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் காணிகளில் அனுமதியற்ற வியாபார அறைகள் நடாத்திச்செல்ல இடமலிக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபைக்கு செந்தமான காணகளைி சபையின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | பிரதேச செயலகத்திலிருந்து மீள் நிரப்பிக்கொள்ள வேண்டிய ரூபா 280,853 ஆன தொகையை சபை நிதியத்தால் செலுத்தியிருந்தது. | பணத்தை சபைக்கு அழைப்பித்தக் கொள் நடவடிக்கை எடுக்க வேண்டும். | P/15/14 இலக்க வழக்கின் மூலம் தடை கட்டளையொன்று பிறபிக்கப்பட்டுள்ளதால் அத் தொகை செலுத்தப்பட்டது. 2015.11.21 பிரதேச செயலாளரால் இக் கருத்திட்டம் பூர்த்தி இல்லை எனக் கூறி கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்டது. |
| (இ) | 2018 ஆண்டில் விஷேட பொருளாதார அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் மெதகும்பர பிரதேச சபை அதிகார பிரதேச வேலையற்றோர் மக்களுக்கு பயிற்சியுடன் 124 தையல் இயந்திரம் வழங்க ரூபா 3,500,000 செலவிடப்பட்டிருந்த போதும், சுய தொழிலில் ஈடுபட்டிருக்காததனால் வேலைத் திட்டத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. 2017 ஆண்டிளும் சுயதொழிலை மேன்படுத்த 71 தையல் இயந்திரங்களுக்காக ரூபா 2,000,000 செலவிடப்பட்டிருந்ததுடன், அதன் வெற்றித் தன்மையை பரீட்சிக்காது இரண்டாம் முறையும் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | வேலைத் திட்டம் பயனுறிதிமிக்கதா என பின்னூட்டல் செய்ய, சுய தொழில் கருத் திட்டங்களின் வெற்றி தொடர்பாக பின்னாய்வு செய்து கருத்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்திட்ட பயன் பெறுபவர்களின் பெயர் பட்டியலை சபை அங்கத்தவர்கள் வழங்கியிருந்தனர். இதற்கு பிரதேச சபை சம்பந்தப்படாததுடன், மதிப்பிற்குரிய சபை அங்கத்தவர்களின் பயன்பெறுவோர் பட்டியலிற்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

3.3 **மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 பதவிகளில் 17 வெற்றிடங்கள் மற்றும் 2 பதவிகளிற்காக 3 மிகையும் நிலவின. | மிகை ஊழியர்களுக்கான அங்கீகாரம் மற்றும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை பூர்தததி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற 22 ஊழியரகளிடமிருந்து ரூபா 1,519,761 ஆன கடன் மீதி அறவிடுவதற்கு இருந்தது. | நிலுவை கடன் மீதி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது மீதிகள் குறைந்துள்ளன. |

3.4 **செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உடிஸ்பத்துவ சந்தை அமைந்துள்ள கட்டிடத்தில் கடையறை ஒன்றை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ரூபா 240,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்ததுடன், மதிப்பிடப்படாத கிழ் மாடி விளைவற்று நிலவியது. | மதிப்பீட்டு குத்தகை அறவிடப்பட்டு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூன்று முறை டென்டர் விடப்பட்ட போதும் குத்தகைகாரர் எவரும் முன்வராததனால் 2018 செப்தெம்பர் 27 ஆம் திகதி பயிற்ச்சி நிலையத்தை நிருவ மகா சபை உத்தேசம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறேன். |
| (ஆ) | பெருளாதார மையத்தில் நிலுவை கடை வாடகை ரூபா 1,155,922 ஆனதுடன், 8 கடைகளில் நிலுவை கடை வாடகை ரூபா 409,598 ஆனது. அக் கடைகளை உப குத்தகைக்கு வழங்கி வெளித்தரப்பினர் ஒருவரால் ரூபா 1,760,000 ஈட்ப்பட்டிருந்தார். | கடையறை நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் உப குத்தகை வழங்கல் தொடர்பாக சட்ட, விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 9 கடையறைகளின் 5 யினை உப குத்தகைக்கு வழங்கவில்லை என எழுத்து மூலம் அறிவித்துள்ளதுடன், எஞ்சிய குத்தகைகாரர்களுக்கு உடன்படிக்கையின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் அவ் உடன்படிக்கைகளை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு சொந்தமான காணிகளை மதிப்பீடு செய்யாது குத்தகைக்கு வழங்கியிருந்ததுடன், 10 குத்தகைகாரர்களிடமிருந்து 8 மாதங்கள் முதல் 09 ஆண்டுகள் வரை காலத்திற்கு வாடகை ரூபா 468,815 நிலுவையாக இருந்தது. | மதிப்பிடப்பட்ட குத்தகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 92,000 அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சியத்தை அறவிடுவதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கிறேன். |
| (ஈ) | சபைக்கு சொந்மான வாராந்த சந்தை மாட்டு இறைச்சிக்கடை மற்றும் மீன் கடைகளின் நிலுவை வரி மீதி ரூபா 1,081,396 ஆனது. | 2009 முதல் நிலவி வரும் மீதியொன்றாகையால் சட்ட ரீதியான நடவடிக்கை மூலமேனும் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

3.5 **விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 600,000 பெறுமதியான ஜீப் வண்டி 5 வருடங்களாக விளைவற்று நிலவியதுடன் மேலும் 5 வாகனங்கள் குறைபயன்பாட்டுடன் நிலவின. | ஏலவிற்பனை செய்வதற்கு அல்லது பழுதுபார்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | ரூபா 24,928,666 பெறுமதியான மோட்டர் கிரேடர் விளைவற்றதாக நிலவியது. | இந்த சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

3.6 **பெறுகைகள்**

**பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் ரூபா 34,347,856 ஆன மூலதன செலவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 24 செலவின விடயங்களுக்குரியதாக மதிப்பிடப்பட்ட ரூபா 1,979,600 ஆன தேறிய ஒதுக்கீடு எஞ்சியிருந்தது. | நடைமுறை சாத்தியமான பாதீட்டு தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |